NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 13 November 2019

# புலம்பெயர் மாநாட்டில் பெண்கள் அதிகாரம் பற்றி விவாதிப்பு

பெண்களுக்கு அதிகாரமளித்தல் பற்றி இவ்வார இறுதியில் சிங்கப்பூரில் நடைபெறும் தெற்காசிய புலம்பெயர் மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய ஆய்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தெற்காசிய புலம்பெயர் மாநாட்டில் இந்தத் தலைப்பு பற்றி பேசப்படுவது இது முதல்முறை என்றும் 2011ஆம் ஆண்டு முதல் இந்த மாநாடு நான்காவது முறையாக நடத்தப்படுகிறது என்றும் கூறப்பட்டது.

"பெண்களிடையே, குறிப்பாக தெற்காசிய பெண்களிடையே தங்களுக்குள்ள அதிகாரம், உரிமை போன்ற விவகாரங்களில் அதிக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது," என்று தெற்காசிய ஆய்வுக் கழகத்தின் தலைவர் திரு கோபிநாத் பிள்ளை நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

"இந்தியாவில் அல்லது பொதுவாக தெற்காசியாவில் பெண்களின் நிலைமை மாறி வருகிறது என்று கூறுவேன்," என்றும் திரு கோபிநாத் மேலும் கூறினார்.

பெண்களுக்கு அதிகாரமளித்தல் பற்றி உலகமெங்கும் குரல் எழுப்பப்பட்டு வரும் வேளையில், நாமும் இதன் தொடர்பாக விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே இந்த மாநாட்டில் முக்கிய விவாத தலைப்பாக இதைத் தேர்வு செய்தோம் என்றார் திரு கோபிநாத்.

"துடிப்பான தெற்காசியா-புத்தாக்கமிக்க புலம்பெயர்ந்தோர்" என்பதுதான் வரும் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தேசிய பல்கலைக்கழக கலாசார மையத்தில் நடைபெறும் இம்மாநாட்டின் கருப்பொருள்.

சனிக்கிழமையன்று "தெற்காசியாவில் பெண்களுக்கு அதிகாரமளித்தல்" எனும் தலைப்பில் பிரதமர் அலுவலக அமைச்சர் இந்திராணி ராஜா உரையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.